REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 7உ செவ்வாய் (23—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 8உ புதன் (24—8—55) [இதழ் 60

சென்னை-இரங்கூன் கப்பல் போக்குவரவு துவக்கம்

சென்னை, ஆக. 28—

சென்னைக்கும்—இரங்கூனுக்குமிடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து வரும் ஞாயிறு முதல் துவங்கும். சிந்தியா 'கம்பெனி'யாரின் 'சோனுவதி' என்ற கப்பல் இன்று சென்னை வந்து சேரும். இங்கிருந்து இரங்கூனுக்கு ஆக. 28-ந் தேதி புறப்படும்.

இதற்கு முன் சிந்தியா கம்பெனியார், தாங்கள் இந்த வழியில் செலுத்திக்கொண்டிருந்த 'ஜலகோபால்' கப்பல் போக்குவரத்தை சில தினங்களுக்குமுன் நிறுத்திவிட்டதும், பின்னர், அவர்கள் செயலுக்கு தமிழகத்தில் பெரும் எதிர்ப்பு கிளம்பிய தும் நினைவிருக்கலாம்.

'சோனுவதி' கப்பல் சுமார் 500 பிரயாணிகளையும், 1,800 டன் நிறையுள்ள பொருள்களையும் ஏற்றிச்செல்லக்கூடியது

இலங்கை திராவிடர்க்கு மறுவாழ்வு!

மந்திரி சுப்பிரமணியம் கைவிரிப்பு!

பிரச்சினை பெரிதாக வளரவில்லையாம்!

சென்னை, ஆக. 22—

"பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு 'புனர் வாழ்வு' அளிக்கப்பட்டது; அதுபோல, இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுபவர்களுக்கு வாழ்வு வசதிகள் அளிக்கப்படுமா?"

என்று, சென்னை சட்டசபையில் உறுப்பினரொருவர் கேட்ட போது, அமைச்சர் சுப்பிரமணியம் கூறினர்:—

"இந்தியர்கள் வெளியேற்றப்படும் பிரச்சினை பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார்; இன்னும் இலங்கையிலிருந்து எவரும் திருப்பி அனுப்பப்படவில்லை (!) (?) பெரும் அளவில் இலங்கையிலிருந்து இந்திய மக்கள் வெளியேற்றப் பட்டால் வசதி அளிப்பது பற்றி பரிசீலிக்கலாம்."

மற்றுமோர் கேள்விக்குப் பதிலளிக்கையில் மந்திரி சுப்பிரமணியம் சொன்னார்:—

"பெரும் அளவில் புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுபற்றி யோசிக்க வேண்டிய அளவு, இலங்கையிலிருந்து வந்துள்ள இந்தியர்கள் பிரச்சினை பெரிதாக—முக்கியத்துவம் வாய்ந்ததாக உருவாகவில்லை."

"கடந்த இரண்டாண்டுகளில் எத்தனை இந்தியர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்ற விவரம் தரமுடியுமா?"—என்று கேட்டபோது, தனிக் கேள்வி ஒன்று கேட்குமாறு மந்திரி பதிலிறுத்திருக்கிறார்.

சர்க்கார் ஒப்புக்கொண்ட ஊழல்!

சோத்பூர் கண்ணாடி தொழிற்சாலை: ரூ. 60 இலட்சம் நஷ்டமாயிற்று

தொழில் நிதி கார்ப்பரேஷன் போக்கின் விளைவு

புதுடில்லி, ஆக. 21—

ரூ. 1-கோடிக்கும் அதிகமாக தொழில் நிதி கார்ப்பரேஷன் முதலீடு செய்திருந்த சோத்பூர் கண்ணாடித் தொழிற்சாலை சுமார் ரூ. 62-இலட்சத்திற்கு விற்கப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஜப்பான் நிறுவனம் ஒன்றிற்கு விற்கப்பட்டுள்ள அந்தக் கண்ணாடித் தொழிற்சாலையினால் தொழில் நிதி 'கார்ப்பரேஷனு'க்கு சுமார் 55 முதல் 60 இலட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த சோத்பூர் கண்ணாடித் தொழிற்சாலைக்கு, தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் கடன் வழங்குவதில் தாறுமாறாக, முறை தவறி, தன்னிஷ்டம் போல் நடந்து கொண்ட விவரங்கள் ஏற்கனவே, மக்கள் சபையில் பலத்த கண்டனத்திற்கு ஆளானதும், இந்த ஊழலை சர்க்கார் பகிரங்கமாக ஒப்புக்கொண்டதுடன், தனது வழக்கமான சமாதானத்தைக் கூறியதும் நினைவிலிருக்கலாம்.

மக்கள் சபை விசாரணைக் குழுவினர் இது பற்றி விசாரித்து, அறிக்கையும் வெளியிட்டிருந்தனர்.

இதன் விளைவாக இப்போது ஏதேனும் ஒரு தொழிலுக்கு இந்த கார்ப்பொரேஷன் ரூ. 50 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்க வேண்டுமானல், சர்க்காரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற விதிமுறை ஏற்பட்டது.

மேலும் இந்த கார்ப்பொரேஷன் தலைவர் ஒரு சம்பளம் பெறும் முழுநேர அதிகாரியாக இருக்க வேண்டும் என்று குழு செய்த சிபாரிசினை சர்க்கார் ஏற்றுக் கொண்டதுடன், அதற்கான மசோதா ஒன்றும் அந்த சிபாரிசை அமுல் நடத்துவதற்காக, தயாரிக்கப்பட்டிருக்கிறது.

முன்பு, கார்ப்பரேஷனின் நிர்வாகத்தில் இருந்த பெரும் அதிகாரிகளே, பகிரங்கமான 'மோசடி'களில் ஈடுபட்டனர் என்றெல்லாம் கூறப்பட்டது.

இப்போது அந்த கண்ணாடித் தொழிற்சாலை வேறு ஒரு வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்கப்பட்டிருப்பதுடன், இந்த 'தாறுமாறான நடவடிக்கை' முடிவுறுவதாகக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

'தினத் தந்தி'யின் பித்தலாட்டம்

மேலும் ஒரு சான்று!

"'தினத் தந்தி' வெளியூர் 22—8—55-ந் தேதி இதழில், 'தி. மு. க. நடிகர் மீது இளம் வாத்தியாரம்மாள் புகார்,' என்று ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. அச்செய்திக்கும் தி. மு. கழகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது;

"அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்கள், தி. மு. கழகச் சாதாரண உறுப்பினர்கள்கூட அல்ல; மேலும், தி. மு. கழகத்தில் எவ்வித சம்மந்தமுமற்றவர்கள்; தோழர் மு. கருணாநிதி எழுதிய நாடகத்தில் நடித்த காரணத்திற்காக அவர்களை, 'தி. மு. கழக நடிகர்கள்' என்று தி. மு. கழகத்தோடு தொடர்புபடுத்தியிருப்பது வழக்கமான, 'தினத் தந்தி'யின் பச்சைப் பித்தலாட்டமே!"

என்று, திருப்பூர் கிளை தி. மு. கழகப் பொருளாளர் தோழர் எஸ். எல். நடராசன், நகர தி. மு. கழகச் சார்பில் அறிவித்திருக்கிறார்.

1,000 பேர் பலி?

மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும் பிரெஞ்சு ஆதிபத்தியத்திற்கு எதிராக கடந்த ஒருவார காலமாக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களை ஒட்டி இதுவரை உயிரிழந்தவர் எண்ணிக்கை 1,000 இருக்குமென, அதிகாரப் பற்றற்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலைச் சமாளிக்க, பிரெஞ்சு இராணுவத்தினர் மிகக் கஷ்டப்பட்டிருக்கின்றனர்.

இராணுவத்தினர், கிளர்ச்சிக்காரர்களின் வசப்பட்ட நகரங்களை எல்லாம் திரும்பவும் கைப்பற்றிவிட்டதாகவும், நிலைமை இப்போது கட்டுக்கடங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நேற்றிரவு கூட, காசபிளாங்கா, ராபட்ஒயட் ஜெம் முதலிய நகரங்களில் சிறு சிறு தாக்குதல்களும் சம்பவங்களும் நிகழ்ந்தனவென்று கூறப்பட்டிருக்கிறது.

கோவாவில் 'புரட்சி?'

போர்ச்சுகீசியரை வெளியேற்ற உருவாக்கப்படுகிறதாம்!

பம்பாய், ஆக. 22—

கோவாவிற்குள் ஒரு பெரும் புரட்சி உருப்பெற்று வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

சர்க்கார் அலுவலகங்களையும், பாலங்களையும் தீயிட்டுக் கொளுத்தவும், செய்திப் போக்குவரத்துக்களைத் துண்டிக்கவுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுநிர்வாகத்தை நிலை நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடைபெறுகின்றனவாம்!

கோவாவில் உள்ள தேசீய இயக்கம் இப்போது, போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை வீழ்த்த இறுதி முயற்சியை மேற்கொள்ளப்போவதாகவும் கூறப்படுகிறது.

கோவாவிற்குள் நுழைந்து இந்தியர்கள் நடத்திய போராட்டம், கோவா தேசீய இயக்கத்தவருக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டியுள்ளதாம்!

இராணுவச் சட்டம் மீண்டும் கோவாவில் பிறப்பிக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிறதாம்!

தலைமறைவாயிருந்து தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ள கோவா தேசீய இயக்கத்தவர் 'கொரில்லா' தந்திரங்களைக் கையாள எண்ணியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அறிவிப்பு

என் பெயரில் 'அருள் நெறி' என்ற புத்தகத்தை, மதுரை 'அறிவுப் பண்ணை' என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெயரில் அப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட நான் யாருக்கும் அனுமதியோ, உரிமையோ அளிக்கவில்லை. என்னுடைய கருத்துக்கள் என்று அப்புத்தகத்தில் தப்புந் தவறுமாகவும், தாறுமாறாகவும், இல்லாதும் பொல்லாதுமாகவும், மாற்றியும், திருத்தியும் என் சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

பொய்யையும், திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக்கொண்டு இழி தொழில் நடத்தும் தமிழகத்தின் அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில், என்னைக் கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொதுமக்களும் அவர்தம் இழி செயலுக்கு ஆதரவு தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்
22—8—55

ஒத்திவைத்தனர்!

ஆக. 27-ந் தேதி ஆரம்பமாகவிருந்த பொது மக்கள் சத்தியாக்கிரகத்தை தற்காலிகமாக ஒத்திவைக்க பாட்னா மாணவர் செயல் கமிட்டி தீர்மானித்துள்ளதாம்.

சிறைதான் இடமாம்!

முதலமைச்சர் மார்ஷல் எச்சரிக்கிறார்

"பத்தாயிரம் பேராயிருந்தாலும் சரி, இலட்சம் பேராயிருந்தாலும் சரி—அதைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை; சட்டத்தை மதித்து நடக்காதவர்களுக்கு சிறைதான் இடமாகும்"

என்று, சிங்கப்பூர் முதலமைச்சர் மார்ஷல் ஆத்திரத்துடன் கூறியுள்ளார்.

அதிகச் சம்பளம் கோரி, நகரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

'கலக'த்தை அடக்க கூட்டு முயற்சி!

கெய்ரோ, ஆக. 21—

"தெற்கு சூடானில் ஏற்பட்டுள்ள கலக நிலையை அடக்கி, ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்ட பிரிட்டன்—எகிப்து ஆகிய இரு நாட்டுத் துருப்புகளும் அனுப்பப்பட வேண்டும்," என்று, எகிப்து, பிரிட்டனுக்கு அதிகாரபூர்வமான யோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறதாகத் தெரிய வருகிறது.

ஏற்பட்டுள்ள ஆபத்தான சூழ்நிலை பற்றி விவாதிப்பதற்காக சூடான் தலைவர்கள் ஒரு 'வட்ட மேஜை' மாநாட்டினைக் கூட்ட வேண்டும் என்றும், அந்த யோசனையைத் தெரிவித்த எகிப்தின் சூடான் விவகார மந்திரி மேஜர் சாலே சலீம் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா வற்புறுத்துமாம்!

செப். 20-ந் தேதி ஆரம்பமாகும் ஐ. நா. சட்டசபைக் கூட்டத்தில் சீனக் குடியரசை ஐ. நா.வில் உறுப்பினராக்குமாறு இந்தியா வற்புறுத்துமாம்.

10,000 சிங்கப்பூர் நகரசபைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஆறாவது நாளாக தொடருகிறது

சிங்கப்பூர், ஆக. 22—

நகரசபைத் தொழிலாளர் சுமார் 10,000 பேர் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் இன்று ஆறாவது நாளாக நடைபெறுகிறது.

சங்கத்தில் இடம் பெறாத நகரசபைத் தொழிலாளர்களை வேலை செய்யவிடாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தொந்தரவு செய்ததாக—தொல்லைகள் தந்ததாகச் செய்திகள் கூறுகின்றன.

ஆங்காங்கே கல்லெறி சம்பவங்களும், 'பலாத்கார வாடை' வீசும் செயல்களும் நிகழ்ந்தன என்று பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

கல்லடிபட்டதால் ஒரு 'லாரி' ஓட்டுபவர் காயமடைந்ததாகவும், அதனை ஒட்டி 11 வேலை நிறுத்தக்காரர்கள் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சேரிகள், மற்றும் தெருக்களிலெல்லாம் 'கூர்க்கா' போலீசார் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனராம்!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—8—'55 செவ்வாய்

பார்க்கட்டும்! பார்க்கட்டும்!

"எட்டு ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். 'ஏன் இயலவில்லை?'—என்பதற்கான விளக்கம்கூடத் தரப்படவில்லை. எல்லா புதிய இரயில் பாதைகளும் வடக்கேதானே போடப்பட்டன? தெற்கே ஒரு புதிய இரயில் பாதையென்றால் பேசாமலேயே இருக்கின்றனர் வடநாட்டவர். ஏன் இந்த மௌனம்? காலஞ் சென்ற கோபால்சாமி இரயில்வே மந்திரியாயிருந்த காலத்திலேயே கவனிப்பதாகக் கூறியிருந்தார். இன்றுவரை திட்டம் ஏட்டளவில்தானே இருக்கிறது? எனவே, திட்டத்தை அமுல் நடத்துமாறு, மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேனும், திட்டம் ஈடேற வேண்டும்" என்பதாக, மைசூர் சட்ட சபையில் சில திங்கள் முன்னால் பல கட்சியினரும் பேசினர்.

மைசூர் மாநிலத்தில் உள்ள சாமராஜ நகருக்கும், சென்னை மாநிலத்தில் உள்ள சத்தியமங்கலத்திற்குமிடையே இரயில் பாதை ஒன்று அமைக்கவேண்டும் என்ற எங்களின் நீண்டநாள் கோரிக்கையை இந்திய சர்க்கார் உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்று ஒரு தீர்மானமும் நிறைவேற்றினர் அவர்கள்.

முதன் மந்திரியான அனுமந்தையா அவர்கள் தீர்மானத்தை சட்ட சபையில் நிறைவேற்றி வைத்ததுடன், உறுப்பினர்கள், இந்திய சர்க்கார் தென்னாட்டவர் மீது கொண்டுள்ள மாற்றாந்தாய் மனப்போக்கைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களையும், இந்திய சர்க்காருக்குத் தெரிவித்து, இரயில் பாதை அமைப்பினை வற்புறுத்துவதாகக் கூறினார்.

நேற்று முன்தினம், அந்த திட்டத்தினை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு இந்திய சர்க்கார் ஒப்புதல் தந்திருப்பதாக முதன் மந்திரி அனுமந்தையா தகவல் தந்திருக்கிறார்.

அது மட்டுமா? 'முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே, இரயில் பாதை அமைப்புக்கான பூர்வாங்க வேலைகளைத் துவங்கவேண்டும்,' என்று, இந்திய சர்க்காரை வற்புறுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எட்டாண்டுகளாகக் கேட்டு வந்தனர்—பலன் இல்லை!

ஒருநாள் சட்ட சபையில் எல்லோருமாகச் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றினர்; 'ஏன் இந்த மாற்றாந்தாய் மனப்போக்கு?'—என்று இந்திய சர்க்காருக்கு இடித்துரைத்தனர்; முதன் மந்திரியும், இந்திய சர்க்காரை அதட்டிக் கேட்க முன்வந்தார்; இந்திய சர்க்கார் விரும்பியோ, விரும்பாமலோ, நிர்ப்பந்தத்தின் காரணமாக, தனது ஆதிபத்தியப் போக்கு மைசூர் மாநிலத்திலும், பலத்த கண்டனத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்கு அஞ்சி, இன்று சாமராஜநகர்—சத்தியமங்கலம் இரயில் பாதை அமைப்புத் திட்டத்தை ஏற்க ஒப்புதல் தந்திருக்கின்றது.

இது மைசூர் மாநிலத்தில்—திராவிடத்தின் மற்றொரு பகுதியில் உள்ள சர்க்கார், தன்னை அடக்கி ஆளும் வடநாட்டு எஜமானர்களிடம், தன் மக்களுக்குத் தேவையானவற்றைப் பெறுவதற்குக் கையாளும் தட்டிக்கேட்கும் தன்மை!

மைசூர் மாநில சர்க்கார், மத்திய ஆட்சியினரின் மாற்றாந்தாய் மனப்போக்கை இடித்துரைத்து நேர்மை கோரும் உள்ள உரம் பெற்றிருக்கின்றனர்!

ஆனால், சென்னை மாநில சர்க்காரோ?

'சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை வேண்டும்' என்று, அங்கு இரும்புக் கனி கிடைக்கிறது என்று தெரிந்த நாள் முதலாகக் கேட்டு வருகின்றனர்—இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் அக்கரை கொண்டோர்!

கடந்த சமீபகாலத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால், வடநாட்டில் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

தென்னாட்டில் — தமிழகத்தில், உயர்தர இரும்புக் கனி கிடைத்தும், அதனை பொருள்களாக வடிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ, திட்டங்கள் தீட்டும் மத்திய ஆட்சியினருக்கு மனமில்லை—விரும்பவில்லை அவர்கள்—தங்களின், தங்கள் வடபகுதி மக்களின் நலன் கருதி!

சென்னை மாநிலத்திலும் சர்க்கார் ஒன்று இருக்கிறது—மைசூர் மாநிலத்தில் இருப்பதைப் போலவே! இரண்டும், காங்கிரஸ் கட்சியினரைக் கொண்டதுதான்!

எட்டாண்டுகள் கேட்டும் பலனற்றதும், சட்டசபையில் மத்திய சர்க்காரைக் கண்டித்து காரசாரமான விவாதம்—தீர்மானம்—முதன் மந்திரியின் வற்புறுத்தல்—இந்த வழி நடக்கின்றனர், மைசூர் சட்ட மன்றத்தினர்!

ஆனால், சென்னையோ?

சட்டசபையில் தீர்மானம் வந்தது;—'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வேண்டும்'—என்று! பல கட்சியினரும் பேசினர்; சிலர், வழி வகைகள்கூடக் கூறினர் — திட்டத்தை அமுல் செய்ய!

ஆனாலும், தொழில் மந்திரி, தனது வழக்கமான 'சமாதான'த்தைக் கூறி, தீர்மானத்தைக் கைவிடக் கோரியிருக்கிறார். தீர்மானம் கொண்டு வந்த எதிர்க் கட்சியினரும், அதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்; மந்திரி கூறிய சமாதானத்தில் அவர்கள் திருப்திப்பட்டனரோ, என்னவோ?

ஆனால், மைசூர் மாநில சர்க்கார் பெற்றுள்ள நெஞ்சுரம் கூட, சென்னை சர்க்கார் பெற்றிருக்கவில்லை என்பதைத் தான், துவங்கவிருக்கும் சாமராஜநகர் — சத்தியமங்கலம் இரயில் பாதை அமைப்பும், தூங்கிக் கொண்டிருக்கும் சேலம் இரும்புக் கனியும் சொல்லுகின்றன— என்று, இந்நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

'நெய்வேலி பலன் தராது; அது வெறும் தண்டச் செலவு' என்கிறார் ஒரு மத்திய மந்திரி; 'வேலைகள் நடைபெறுகின்றன,' என்கிறார் இன்னொருவர்!

'சுரங்கத்தில் ஊறும் தண்ணீரை இறைக்க போதுமான இயந்திரங்கள் இல்லை,' என்கிறார் மாநில மந்திரி!

இந்த இலட்சணத்தில் இருக்கும் நெய்வேலி சோதனை முடிந்த பிறகு, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்குவது பற்றிப் பார்க்கப் போகிறார்களாம்! பார்க்கட்டும்! பார்க்கட்டும்!

நாடித் துடிப்பை அறிவதற்கு அணுசக்தி

டாக்டர்களின் கண்டுபிடிப்பு

அமெரிக்க இராணுவ வைத்திய சாலையைச் சேர்ந்த டாக்டர்கள், ரேடியோ ஐஸோடோப்பைப் பயன்படுத்தி நாடித் துடிப்பை நுட்பமாய் காணும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இரத்தாசய நோய்களைக் கண்டு பிடிக்கவும், அவற்றைத் தீர்க்கவும் அம்முறை துணை செய்யும்.

மிக நுண்ணிய அணுக் கதிரியக்கப் பொருள் இரத்தக் குழாய்க்குள் செலுத்தப்படும்; அதன் பின், விசேட 'கெய்கர் கவுண்டர்' இரத்தாசயத்தின் நிலையைக் கண்டு பிடிக்கும்.

தடை உத்தரவு நீடிப்பு

சென்னை மவுண்ட்ரோட், புதிய சட்டசபைக் கட்டிடம், மேல் சபைக் கட்டிடம் ஆகியவற்றைச் சுற்றிலுமுள்ள பாதைகளிலும், பொது இடங்களிலும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு, செப். 4-ந் தேதி முடிய நீடிக்கப்பட்டுள்ளது.

அரியலூரில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

5,000 மக்களிடையே கொள்கை விளக்கம்

19—8—55 மாலை அரியலூரில் ஒப்பில்லாதம்மன் கோயில் முன் அமைந்த பந்தலில், தோழர் ஆர் சின்னையன் தலைமையில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சுமார் 5000 பேர் கலந்து கொண்டார்கள். தோழர்கள் அம்பில் தர்மலிங்கம், குளித்தலை முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் பேசிய பின், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'திராவிடம் என்பது எது?'—என்பதை விளக்கி, 'திராவிட நாடு எவ்வளவு தாழ்த்தப்பட்டிருக்கிறது,'—என்பதைக் குறிப்பிட்டுப் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்நாடு இயற்கைவளம் நிறைந்தது; அவ்வளங்களால் ஏற்படும் வருமானம் ஏராளம்; நம்மை பிறநாடுகளும், வடநாடும் எதிர்பார்க்கவேண்டும்; நம் நாட்டுத் துறைமுகங்களில் ஏற்றுமதியாகும் பொருள்களால் பல கோடி ரூபாய் கிடைக்கிறது; இவ்வளவு ரூபாயும் நம் மாகாண சர்க்காருக்கு சேராது; அவை முழுவதும் டில்லிக்குத்தான் செல்லும்; இவ்வளவு கோடி ரூபாயும் இந்நாட்டில் தங்கினால் எவ்வளவு தொழில் வளங்களை செய்ய முடியும்?—எவ்வளவு மக்களுக்கு வேலை கொடுத்து மக்கள் சுகமாக வாழமுடியும்?—இவ்வளவு கோடி ரூபாயையும் கொடுத்துவிட்டு, நம் மாநில ஆக்க வேலைக்கு ஏழை மக்களிடம் கடன்வாங்க வேண்டியிருக்கிறது. நம் நாடு தனியாக இருந்தால் இந்த வருமானங்கள் நம்மையே சாரும்.

"'நாம் தனியாக வாழ முடியுமா?' — என்று சில அருமை காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள்; உலகத்தில் நம்மைவிட பெரிய நாடுகள் மொத்தம் ஆறுதான்; நம் நாட்டில் உள்ள முனிசிபாலிடி—ஏன் சாதாரண பஞ்சாயத்து போர்டு அளவு மக்கள் தொகை உள்ள நாடுகள் தனித்து சுதந்திர நாடாக வாழ்ந்து ஐ. நா. — வில் அங்கம் வகித்து, உலக நன்மைக்குத் திட்டம் தீட்டுகின்றதென்றால் கிட்டத்தட்ட $7\frac{1}{2}$ கோடி மக்கள் வாழும் நம் நாடு ஏன் தனித்து வாழ முடியாது என்று கேட்கிறேன்?

"நமக்கு என்ன இல்லை? கடற்கரையே இல்லாத பல நாடுகள் நல்லமுறையில்வாழ்கின்றன; இராணுவமே இல்லாமல் பல நாடுகள் வாழ்கின்றன; நமக்கு 1,600 மைல் நீளம் கடற்கரை உள்ளது; பூமியில் எல்லா வகை பொருளும் விளைகிறது; இந்தியா பூராவிற்கும் காப்பி கொடுக்கிறது; உலகத்திற்கு மிளகு கொடுக்கிறது; பூமிக்கு அடியில் தற்கால விஞ்ஞான உலகத்திற்கு வேண்டிய தோரியம், யுரேனியம், ரேடியம் போன்ற உலோகப் பொருள்கள் ஏராளம்; இரும்பு, நிலக்கரி, ஜிப்சம் இவைகள் புதைந்து கேட்பாரற்று இருக்கிறது. இவ்வளவும் இருக்கும்போது ஏன் தனித்து வாழ முடியாது?

"ஐந்தாண்டுத் திட்டங்களில் மத்திய சர்க்கார் பூராசெலவிலும் செய்யும் நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் வடநாட்டில்தான்; மாகாண சர்க்காரும், மத்திய சர்க்காரும் சேர்ந்து செய்யும் திட்டங்கள் சில, தென்னாட்டில்—அவைகள் எல்லாவற்றையும் சேர்த்து நம்நாட்டில் ரூ 63 கோடிக்குத்தான் இருக்கிறது; ஆனால், வடநாட்டில் ரூ. 1,500 கோடிக்கு நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேறுகின்றன; தொழில் வளத்திலும் அப்படியே; 'குடிசைத் தொழிலை ஆதரிக்கிறோம்,' என்று சொல்லிக் கொண்டே, வடநாட்டில், இரும்பு உருக்குத் தொழிற்சாலை மூன்று; உரஉற்பத்தி தொழிற்சாலை ஒன்று; இரயில் எஞ்சின் தொழிற்சாலை ஒன்று — இப்படியாக, எல்லா தொழிற்சாலைகளும் வடநாட்டில் தான் நடைபெறுகின்றன; தென்னாட்டில் ஒரு தொழிற்சாலையும் கிடையாது; தனிப்பட்ட சில முதலாளிகள் தொழில் நடத்த முன்வந்தாலும், வடநாட்டினர் போட்டிக்கு வந்து, அந்தத் தொழிலை நசிக்கச் செய்கிறார்கள். ஜவ்வரிசி தொழில், வெற்றிலை வியாபாரம், தீக்குச்சி தயாரித்தலும், நாகப்பட்டினம் தொழிற்சாலை ஆகியவைகளே இதற்கு உதாரணமாகும்; இவைகளுக்குப் போட்டியாக, பொருள்களைக் குறைந்த விலைக்குக் குவித்து, அத்தொழில்கள் நசிந்து போகச் செய்துவிட்டார்கள்; இப்படிச் செய்வதற்கு மத்திய அரசாங்கத்தில் இடம் இருக்கிறது. மக்கள் சபை உறுப்பினர்களில் 64 பேர், மத்திய சர்க்காரிலே முதலாளிகள்; நமக்கோ, ஏழைக்கோ நன்மைபயக்கும் எந்தத் திட்டத்தையும் அங்கு கொண்டுபோக முடியாது.

"இப்பொழுது நடப்பது முதலாளி ஆட்சியே தவிர, ஏழைகள் ஆட்சியல்ல; இச்செய்திகளை நாங்கள் கூறினால், 'எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படித்தான் கூறுவார்கள்' என்று காங்கிரஸ்காரர்கள் கூறுவார்கள்; ஆனால், 'தென்னாட்டைப் புறக்கணிக்கிறார்கள்—பாரபட்சமாக நடத்துகிறார்கள்' என்பதை 'சுதேசமித்திரன்' ஆசிரியர்—காங்கிரஸ்காரர் எஸ். ஆர். சீனுவாச ஐயரே எழுதியிருக்கிறார்—எழுதினதுடன் மட்டுமல்ல—கார்ட்டூன் படம் போட்டுக் காண்பித்திருக்கிறார்.

"பெரிய காங்கிரஸ்காரர்களும், தொழில் நிபுணர்களும், பெரிய வியாபாரிகளும்கூட, தென்னாட்டை அலட்சியம் செய்கிறார்கள்—தேய வைக்கிறார்கள் என்பதை இப்பொழுதுதான் உணர ஆரம்பித்து, சிறிது பேசுகிறார்கள்.

"பல வழிகளிலும் ஆதிக்கத்தைச் செலுத்துகிறார்கள், வடநாட்டினர்! மொழி ஆதிக்கத்தை உண்டாக்குவதற்கு இந்தியை தென்னாட்டில் திணிக்கிறார்களே

(4-ம் பக்கம் பார்க்க)

சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இப்போது இல்லையாம்!

குடியிருப்புவசதி இரண்டாம் திட்டக் காலத்தில் யோசிக்கப்படுமாம்!

சென்னை சட்ட சபையில் மந்திரி சுப்பிரமணியம்

"செஜட் பதிவில்லாத சர்க்கார் சிப்பந்திகளுக்கு, பல பகுதிகளில் குடியிருப்புக்கு வசதி செய்து தரும் பிரச்சினை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்துறையில் முன்னேற்றம் ஏற்படும்,"

என்று, சென்னை சட்டசபையில், நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"நிதி நிலைமை காரணமாக, சிப்பந்திகளின் ஊதியம், பஞ்சப்படி ஆகியவற்றை அதிகரிக்க முடியாமலிருக்கிறது; திட்டமிட்டு அபிவிருத்தித் திட்டங்களைக் கையாளும் இத்தருணத்தில், பஞ்சப்படியை சம்பளத்துடன் இணைப்பதானால், பின்னால் செலவுகள் அதிகரித்துவிடும்; இப்போது செலவுகள் இல்லையென்றாலும் அக்கோரிக்கைக்கு இணங்குவதற்கில்லை."

என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிக்கு, சிப்பந்திகள் தூண் போன்று இருப்பதால், அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற, தங்களின் நல்லெண்ணத்தைக் காட்டும் வகையில், ஒரு ரூபாய் சம்பள உயர்வையாவது சர்க்கார் தருமா?' என்று, உறுப்பினரொருவர் கேட்டார்.

அமைச்சர்: "சிப்பந்திகளிடை இப்போது நல்லெண்ணம் நிலவி வருகிறது; அதைக் குலைவுறச் செய்யும் வகையில் உறுப்பினர் முயற்சிக்கக்கூடாது"

முதலமைச்சரிடம் தூது

செஜட் பதிவில்லாத ஊழியர் சங்கத் தலைவரும், பொதுக் காரியதரிசியும் முதலமைச்சர் காமராசரை அவரது இல்லத்தில் சந்தித்து, உடனடியாக உயர்ந்த பட்ச பஞ்சப்படி அளிக்க வேண்டியதின் அவசியத்தையும், தங்கள் கடனைத் தீர்ப்பதற்கு இடைக்கால நிவாரணமாக ஒரு மாத ஊதியத்தை போனசாகத் தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

நடுநிலைமையில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைக் குறிப்பிட்ட முதலமைச்சர், இப்பிரச்சினையைக் கவனித்து தம்மால் இயன்றதைச் செய்வதாகக் கூறினாராம்.

‘கோவாவை அமைதியாகவே விடுவிப்போம்’

பண்டித நேருவின் நம்பிக்கை

சிதாபூர், ஆக. 21—

“கோவா பிரச்சினையைத் தீர்த்து, அங்குள்ள மக்களுக்கு, காலனி ஆதிக்கத்தினின்றும், சமாதான வழிகளிலேயே விடுதலை பெற்றுத் தருவோம் என்று நான் நம்புகிறேன்,”

—என்று பண்டித நேரு, உத்திரப் பிரதேச காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் பேசகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

“இந்தியா தாக்கப்பட்டால், அல்லது இந்தியா மீது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டால், நாம் நமது முழு சக்தியுடன் அதனை எதிர்த்து இந்தியாவைப் பாதுகாப்போம்; நமது, இராணுவத்தினையும் அதற்காகப் பயன்படுத்துவோம்; ஆனால், இதற்கெல்லாம், நாம், யுத்தத்தில் இறங்கமாட்டோம்,”

“கோவா மீது பொருளாதார நடவடிக்கைகளை நாம் தாராளமாக மேற்கொள்ள முடியும்; நாம் ஏற்கனவே அவற்றுள் பலவற்றை மேற்கொண்டிருக்கிறோம்; இன்னும் பல மேற்கொள்ளவிருக்கிறோம்; மிகக் கவனமாக ஆலோசித்து மேற்கொள்ளப்பட வேண்டிய வேறு பல நடவடிக்கைகளும், இதர நடவடிக்கைகளும் உள்ளன; இவைகள் எல்லாம், அமைதியான ஆயுதங்கள்; ஆனால், இவை உடனடியான பலன்களைத் தராதவை என்றாலும், வலிமை மிகுந்த ஆயுதங்களாகும்;

“இந்தியாவில்கூட, கோவா பிரச்சினை பற்றிய குழப்பமான எண்ணங்கள் நிலவுகின்றன. வெளிநாடுகளில் உள்ளவரிடை, பிரச்சினையை முழுக்க முழுக்க தவறாகப் புரிந்துகொண்டிருக்கும் நிலை வெகுவாக இருக்கின்றது.

“சில வெளிநாட்டவரின் விமரிசனங்கள், ஆசியாவிற்கும்—ஆப்பிரிக்காவிற்கும் வெகுவான தீங்கிழைத்திருக்கிற காலனி ஆதிக்கக் கருத்துக்களைக் கொண்டிருப்பதால், அவற்றைக் கண்டபோது நான் ஆச்சரியப்பட்டேன்;

“இந்தக் குழப்பங்களை நீக்கி, உண்மைகளை நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டாக வேண்டும்;

“பூகோள ரீதியாக, கோவா, இந்தியாவின் ஒரு பகுதி; எங்கும் காலனி ஆதிக்கம் இருப்பதை நாம் எதிர்ப்பவர்கள் என்பதால், இந்தியாவின் ஒரு சிறிய நிலப்பரப்பில் காலனி ஆதிக்கம் இருப்பதை நாம் பொறுத்துக்கொள்வது சாத்தியமானதல்ல;

“கோவா மீது நாம் அநியாயமாக ஆசைப்படவில்லை; அந்தச் சிறிய நிலப்பரப்பு, இந்தப் பெரிய இந்தியாவினின்றும் வேறுபட்ட ஒன்றல்ல; ஆனால், ஒரு வெளி ஆதிக்கத்தின் கீழ், அந்தச் சிறு பகுதி இருப்பது, இந்தியாவின் தன்மானத்திற்கும், தேசிய நலன்களுக்கும் உகந்ததல்ல — தீங்கு பயப்பது; அவ்வாறிருப்பது மிக ஆபத்தானதாகும்; அதுவும் குறிப்பாக, போர்ச்சுகல் போன்ற பகைமிக்க—பிற்போக்கு நாடு ஒன்றின் வசம் கோவா இருப்பது இன்னும் அதிகமான ஆபத்தானதாகும்.

“கோவாவில் வாழும் மக்கள் யார்? அவர்களும், நம்மைப் போன்றவர்களே! போர்ச்சுகீசியரின் மக்கள் தொகைக் கணக்குப்படி, அங்குள்ளோரில் இரண்டுக்கும் குறைவான சதவிகிதத்தோரே போர்ச்சுகீசிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்; இதரர்கள், பிறப்பு — மொழி—இனம் போன்ற மற்றவைகளாலும் இந்தியர்களே; அவர்களில் மூன்றில் இரு பகுதியினர் இந்துக்கள்; ஒரு பகுதியினரே கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள்;

“இந்தியாவில் பல இலட்சக் கணக்கான ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர்; அவர்கள் எல்லோரும், இதரர்களைப் போலவே இந்தியர்கள் தாம்;

“கோவாவின் பொருளாதார நிலை, தவிர்க்க முடியாதபடி இந்தியாவுடன் இணைந்த ஒன்றாகும்; எனவே, கோவா மக்கள் காலனி ஆதிக்கப் பிடியினின்றும் விடுபட்டு இந்தியாவுடன் ஒன்று சேர வேண்டுமென்பது நமக்கு இயற்கையாகவே ஏற்படக்கூடிய உணர்வாகும்.

“ஆனால், கோவா மக்களின் விருப்பத்திற்கு மாறாக, நாம், நமது எண்ணத்தை அவர்கள் மீது திணிக்க விரும்பவில்லை; அவர்களே அதுபற்றி முடிவு செய்யலாம்; அவர்களில் 80 - முதல் 90 சத விகிதத்தினர் வரை போர்ச்சுகீசிய ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு, இந்தியாவுடன் இணைவதை விரும்புகின்றனர்; எனவே, பிரதான பிரச்சினையெல்லாம், கோவாவிற்கு, போர்ச்சுகீசியரிடமிருந்து சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்பதுதான்”

‘காலனி ஆதிக்கம் காலமாகிவிட்டது’!

சான்பிரான்சிஸ்கோ, ஆக. 19—

“ஆசியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும், சைப்ரஸ் தீவிலும், காலனி ஆதிக்கம் காலமாகிவிட்டது—என்பதை, சுதந்திர உலகம் உணர்ந்தே தீரவேண்டும்;”

“சைப்ரஸ் தீவில் பகைமை மூண்டு பலாத்காரம் ஏற்படுவது- அமெரிக்கா, கிரீஸ், பிரிட்டன் உள்ளிட்ட சுதந்திர உலகுக்கு நல்லதல்ல,”

என்று, செனட்டில் குடியரசுக் கட்சித் தலைவராக இருக்கும் நோலண்ட், 1,500 பேர் கூடிய ஒரு மாநாட்டில் கூறினார்.

★

‘இருபதாம் நூற்றாண்டில் இம்மறுப்பு செல்லுமா?’

“கோவா மக்களுக்கு சுதந்திரம் அளிப்பதற்கு போர்ச்சுகல் மறுக்கிறது; ஆனால், இந்த 20-ம் நூற்றாண்டில் இம்மறுப்பு செல்லாது”

என்று, லண்டனிலுள்ள ‘அப்சர்வர்’ என்ற சுயேச்சை இதழ் எழுதியுள்ளது.

★

‘பெருந் தீயாகப் பரவும் நெருப்புப் பொறி’

பர்மா பிரதமர் எச்சரிக்கை

“கோவாவில் நடைபெறும் சம்பவங்கள், உலகப் போருக்கு வித்தாகிவிடக் கூடும்; கோவா விவகாரத்தின் முக்கியத்துவத்தை, குறைத்து மதிப்பிட நான் விரும்பவில்லை; அது, பெருந் தீயாகப் பரவிவிடக் கூடிய நெருப்புப் பொறியாகும்; இந்தியாவில் இனியும் தங்கியிருக்க போர்ச்சுகீசியருக்கு எவ்வித உரிமையும் கிடையாது,”

என்று பர்மா பிரதமர் யூ-நு குறிப்பிட்டுள்ளார்.

★

நிரூபிக்கப்படக்கூடாத வதந்தியாம்!

பாகிஸ்தான் பட்டாளமொன்று கோவாவிற்குள் வந்திருப்பதாக வதந்தியொன்று நிலவியதாம்; ஆனால், மத்திய ஆட்சியினர் வட்டாரத்தில், இது ஊர்ஜிதமாகவில்லையாம்!

★

அகிம்சை உதவுமா?

“காட்டுமிராண்டித்தனமான செய்கைகளுக்கு எதிராக, வெறும் அகிம்சா போராட்டத்தை மட்டும் நடத்துவது, கோவா விடுதலைக்கு உதவி செய்வதாகாது,”

என்று, கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே, பம்பாயில் கூறியுள்ளார்

★

சமாதான வழியிலேயே வெற்றியாம்!

“எந்த நிலைமை ஏற்பட்டாலும், கோவாவை விடுதலை செய்ய ‘போலீஸ் நடவடிக்கை’ எடுப்பது பற்றி இந்திய சர்க்காரோ, காங்கிரசோ சிந்திக்க முடியாது; எவ்வளவு ஆத்திரமூட்டப்பட்டபோதிலும் சமாதானப் பாதையிலிருந்து நாம் விலகப் போவதில்லை,”

என்று, காங்கிரஸ் தலைவர் தேபர், புதுடில்லியில் குறிப்பிட்டுள்ளார்.

★

சம்பந்தமில்லையாம்-ஆனால் உரிமை உண்டாம்!

“கோவா சத்தியாக்கிரகத்தில் இந்திய சர்க்காருக்குச் சம்பந்தமில்லை; ஆனால், அநீதியை எதிர்த்து, எங்கு வேண்டுமானாலும் சத்தியாக்கிரகம் செய்ய எவருக்கும் உரிமை உண்டு,”

என்று, ஒரு இலங்கைக் குடிமகன் கோவா அறப்போரில் கலந்து கொள்ளுவது பற்றி தனக்கு எழுதிய கடிதமொன்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், பிரதமர் நேரு, சிதாபூரில் கூறியுள்ளார்.

‘நேர்மை வழி நின்று பணிபுரிந்தவர்’

‘எதிர்க் கட்சியினரின் அன்பைப் பெற்றவர்’

சட்ட சபை தலைவருக்கு ஏ. கோவிந்தசாமி பாராட்டு

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள், சென்ற 10-ந் தேதி நடைபெற்ற சென்னை சட்டசபை கூட்டத்தின்போது, சபைத் தலைவர் திரு. சிவஷண்முகம் அவர்கள், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராகப் பதவி பெற்று, தமது பதவியினின்றும் விலகுவதையொட்டி அவருக்குப் பாராட்டு வழங்குகையில் குறிப்பிட்டதாவது:—

“கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நீங்கள் எங்களிடமிருந்து பிரிக்கப்படுகிறீர்கள் இதை நினைக்கும்போது, குறிப்பாக எதிர்க் கட்சியிலிருக்கிற எங்களுக்கு, மிகவும் வருத்தத்தை அளிக்கிறது; கண்ணீரோடுதான் உங்களை வழியனுப்புகிறோம்; தமிழ்நாடு—அறிவுக்கும், நேர்மைக்கும் முதல் இடம் பெற்றது—என்பதை, தங்கள் மூலம் உணர்த்தி வருகிறது.

“அறிவுக்கும் திறமைக்கும், ‘உயர் ஜாதிக்காரர்கள்’ என்று சொல்லப்படுகிற ஆரியர்கள்தான் உறைவிடம் என்ற நிலைமை மாறி, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலும் நல்ல திறமைசாலிகளும், அறிவுள்ளவர்களும், அனுபவம் உள்ளவர்களும், அன்பு உள்ளம் படைத்தவர்களும் இருக்கிறார்கள் என்பதை, தங்கள் மூலம் இந்த சபையானது இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. இதை நினைக்கும்போது நாங்கள் பெருமைப்படுகின்றோம். ஒரு சிலருக்குத் திறமையிருக்கலாம்; அறிவிருக்கலாம்; ஆனால், அவர்கள், மக்களுடைய பாராட்டுதலையும், நன்னம்பிக்கையையும் பெற்றிருக்க முடியாது; அதற்குக் காரணம், அவர்கள் திருக்குறளைப் படித்து, திருவள்ளுவர் வழி நிற்பதுதான்; திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள குணம் தங்களிடம் அமைந்திருப்பதைக் காண்கிறேன்.

“காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்”

என்பது, திருவள்ளுவரது குறள். அந்தக் குறளுக்குத் தாங்கள் இலக்கணமாக அமைந்தவர்கள். எந்தக் கட்சிக்காரருக்கும் — எந்நேரத்திலும் நீங்கள் பேட்டி கொடுக்கத் தயாராக இருந்திருக்கிறீர்கள்; சில சமயங்களில், நீங்கள், எங்களைக் கடிந்து கொள்ளுவது மாதிரியிருக்கும்; ஆனால், உங்கள் அன்பு கலந்த கடுஞ்சொல் எங்களைப் பரவசப்படுத்துவது மாதிரி அமைந்து வந்திருக்கிறது என்பதை சொல்லாமலிருக்க முடியவில்லை.

“தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பல தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள்; அப்படித் தோன்றிய தலைவர்களில், ஒரு சிலர், சமுதாயத்தால் உயர்வடைந்திருக்கிறார்கள்; வேறு சில தலைவர்கள், தங்கள் சமுதாயத்தை உயர்வுபடுத்தியிருக்கிறார்கள். தாங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகுப்புகளில், இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது எல்லா உறுப்பினர்களும் பேரியறிவிருந்து அறிகிறேன்; சிலருக்குப் பதவி கிடைத்தால், அந்தப் பதவிக்குத் தகுந்தபடி நடக்கஆரம்பிப்பார்கள்; ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுடைய நன்மதிப்பை இழப்பார்கள்; ஆனால், தங்களுக்குப் பெரிய பதவி கிடைத்திருந்தபோதிலும்கூட, தாங்கள், தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த வீட்டிலேயே வாழ வேண்டும்—பாட்டனார்கள் உட்கார்ந்த நாற்காலியிலேயே உட்கார வேண்டும் என்று கூறுவதை நினைக்கும்போது, நான் மிகவும் மகிழ்வடைகிறேன்.

“உங்களுடைய இந்த அருங்குணம், மிகமிக வரவேற்கத் தகுந்ததாகவும், பாராட்டத் தகுந்ததாகவும் அமைந்திருக்கிறது. நான் தங்களை, தங்களது அறையில் சந்தித்த நேரத்தில், ‘எனக்கு இந்தப் புதிய பதவி பிடிக்கவில்லை; காரணம் என்னவென்றால், எனக்கு, என்னுடைய பாட்டனார் வாழ்ந்த வீட்டையும், அவர்கள் வைத்துச் சென்ற நாற்காலியையும் விட்டுப்போவது என்பது வருத்தத்தைத் தருகிறது’ என்றீர்கள்; ‘தாங்கள் வகித்து வரும் சபாநாயகருக்கு ஒதுக்கப்பட்ட நாற்காலியை விட்டுப் போகவேண்டியிருக்கிறதே என்பதற்காக வருத்தப்படவில்லை; தாங்கள், தங்களுடைய பெற்றோர்களுக்கும், முன்னோர்களுக்கும் காட்டிய மரியாதையைப் பார்க்கும்போது, அது எங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

“சட்ட சபை சட்ட நுணுக்கங்களை அதிகம் உணர்ந்திருந்தும்கூட, சிறிதும் செருக்கில்லாமல், அன்பு வழி நின்று, எதிர்க் கட்சிக்காரர்களுடைய நன்மதிப்பைப் பெற்ற தலைவர் யாராவது இருக்கிறார்கள் என்றால், அது

(4-ம் பக்கம் பார்க்க)

‘பெல்லாரி—மைசூருடன்தான் இருக்க வேண்டும்’

‘முடிந்த விஷயங்களில் மீண்டும் தகராறு எழுப்பக் கூடாது’

மைசூர் முதன் மந்திரியின் கடிதம்

மைசூர், ஆக. 21—

“பெல்லாரிமைசூருடன்இணைக்கப்பட்டிருப்பது குறித்து மீண்டும் புனராலோசனை செய்யத் தேவையில்லை; ஏற்கனவே முடிவு காணப்பட்டுவிட்ட விஷயங்கள் குறித்து மேலும் தகராறுகளைக் கிளப்ப வேண்டுவதும் இல்லை,”

என்று, மைசூர் மாநில முதன் மந்திரி அனுமந்தையா, மாநில புனரமைப்புக் குழுத் தலைவரான ஜஸ்டிஸ் பாசல் அலிக்கு கடிதம் எழுதியிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

மைசூர் மந்திரி சபைக்கு, நகர மக்கள் சார்பில் தரப்பட்ட வரவேற்பு ஒன்றுக்கு பதிலளிக்கையில் முதன் மந்திரி மேலும் கூறினார்:—

“பெல்லாரி மைசூருடன்தான் இருக்க வேண்டும் என்பது மைசூர் மக்களின் ஏகோபித்த விருப்பம்; அதுபற்றி மேலும் தகராறுகள் கிளப்புவதை அவர்கள் விரும்பவில்லை,” என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளில் மைசூர் மாநிலம் பெரிதாக அமையும் என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

“முனிசிபல் கமிஷனர்கள் பதவிக்கு அதிகாரியைத் தேர்ந்தெடுப்பதை, பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடமே விட்டுவிடுவதைச் சர்க்கார் விரும்புகிறது” என்று சென்னை சட்டசபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

‘பெல்லாரி மீண்டும் ஆந்திரத்துடன் இணைய வேண்டும்’

இராசேந்திரரிடம் சட்டசபைஉறுப்பினர்கள் முறையீடு

கர்நூல், ஆக. 21—

“பெல்லாரியை, மீண்டும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க வேண்டும்,”

என்று கோரி, ஆந்திர சட்டசபையைச் சேர்ந்த 138 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்திடம் தந்திருக்கின்றனராம்.

“பெல்லாரியை மைசூருடன் இணைக்கும்போது, நிர்வாக வசதி, பொருளாதார நிலை இவற்றைக் கவனிக்காமல், நம்பத்தகாத மொழி வழி விவரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுவிட்டது,” என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

“எல்லா வளங்களுமுடைய ஒரு நகரை மட்டுமல்ல — ஆந்திர மாநிலம் இழந்தது; ஆனால், எல்லா வகையாலும் முக்கியமான, துங்கபத்திரா அணைக்கட்டு, மின்சார உற்பத்தித் திட்டங்கள் இவற்றையும் பெல்லாரியுடன் சேர்த்து ஆந்திரம் இழந்துவிட்டது; இதன் விளைவாக, இராயலசீமா மாவட்டங்களை வெகுவாகப் பாதிக்கும் வகையில், இந்த திட்டங்களின் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது;

“மிகத் தேவையான மின்சார உற்பத்தி, கால்வாய் வசதி முதலியன இல்லாமையினால் ஆந்திர அபிவிருத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது;

“மைசூருடன் பெல்லாரி இணைக்கப்பட்டிருக்கும் அநீதி துடைக்கப்பட்டாலன்றி, அந்த வட்டார மக்களுக்கும், ஆந்திராவுக்கும் விமோசனமேதுமில்லை;

“மேலும், வரும் அக்டோபர் முதல் பெல்லாரியில் புதிய தொரு நிர்வாக முறையை மைசூர் சர்க்கார் மேற்கொள்ளவிருக்கின்றனர் என்பதால், இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும்,”

என்றெல்லாம்; அந்த மனுவில் காணப்படுகிறது.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை

சட்டசபையில் தீர்மானம்:

மந்திரியின் வழக்கமான சமாதானம்

சென்னை, ஆக. 20—

"சேலத்தில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க வேண்டும்; அங்கு ஏராளமான இரும்புக் கனிகள் கிடைக்கின்றன; மேலும் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் நெய்வேலியும் அருகில் உள்ளது; இரண்டாம் திட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் இரு உருக்குத் தொழிற்சாலைகளில் ஒன்றை சேலத்தில் நிறுவ வேண்டும் என்று, சென்னை சர்க்கார், இந்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்,"

என்று, சென்னை சட்டசபை எதிர்க் கட்சியினர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர்.

ஆனால், மந்திரி பக்தவத்சலம், தமது வழக்கமான 'சமாதானத்'தைக் கூறி, தீர்மானத்தைத் திரும்பப் பெறச் செய்துவிட்டார்.

தீர்மானத்தின் மீது பேசிய பலரும், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவ வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டு, அதனால் நாட்டிற்கு ஏற்படும் நன்மைகளையும் விளக்கியிருக்கின்றனர்.

"நிலக்கரி கிடைக்கவில்லை என்பதே, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுவதற்குத் தடை என்று கூறப்படுகிறது; நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை பாதி சுட்ட நிலக்கரியாக ஆக்கி, உருக்குத் தொழிற்சாலைக்காகப் பயன்படுத்தலாம்; இம்மாதிரி கிழக்கு ஜெர்மனியில் செய்யப்படுகிறது; மேலும், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவதற்கு உதவ செக்கோஸ்லவேக்கியா தயாராக உள்ளது"

என்று, தோழர் பி. இராமமூர்த்தி தீர்மானத்தின் மீது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மந்திரி பக்தவத்சலம் பேசுகையில், டில்லி சர்க்காருக்கு சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிறுவும் திட்டத்தில் அக்கறையிருப்பதாகவும், ஆனால் நெய்வேலியில் நடைபெறும் சோதனைகளுக்குப் பிறகு, இதுபற்றி யோசிக்கலாமென்று அவர்கள் கருதுவதாயும், எனவே, இந்த நிலையில் தீர்மானம் தேவை இல்லை என்றும், சேலத்தில் தொழிற்சாலை தேவை என்பதில் சர்க்காருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் கருத்து வேற்றுமை இல்லை என்றும் 'சமாதானம்' கூறியிருக்கிறார்.

நெய்வேலி பரீட்சை முடிந்ததும் அதன் விளைவுகளைப் பொறுத்து, சேலம் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா படுகொலை

சென்னை மேல் சபை, நகரசபை வணக்கம்

சென்னை, ஆக. 23—

கோவா விடுதலையில் உயிரிழந்த போராட்ட வீரர்களுக்கு அனுதாபம் தெரிவித்து சென்னை மேல் சபை உறுப்பினர்கள் சிறிது நேரம் எழுந்து நின்று மரியாதை செலுத்தியதுடன், அங்கு நடைபெற்ற அடக்குமுறைகளுக்கு சபை, வெறுப்பைத் தெரிவித்தது.

* * *

சென்னை நகர சபையின் நேற்றைய கூட்டத்தில், போர்ச்சுகீசியரின் மிருகத்தனமான செயலைக் கண்டித்தும், உயிர்நீத்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எம். எல். ஏ. பட்டினிப் போர் நின்றுவிட்டது

இராபர்ட்சன்பேட்டை, ஆக 22—

எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் உடனே பேச்சுவார்த்தை நடத்துவதாக நிர்வாகிகள் உறுதி கூறியதின் பேரில், சாம்பியன் ரீப் சுரங்கத் தொழிலாளர் சங்கச் செயலாளரும், மைசூர் சட்டசபை உறுப்பினருமான கே. எஸ். வாசன், 17-ந் தேதியிலிருந்து தான் மேற்கொண்ட பட்டினிப் போரை நிறுத்திவிட்டார்.

அரியலூரில் .....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தவிர, இந்தியால் என்ன சாதித்துவிட முடியும்?—என்ன அதிகமான பொது அறிவைப் பெறமுடியும்?—இந்தி இல்லாததால் என்ன காரியம் தடைபட்டுவிட்டது?—நம் ஊர் மக்களுடன் பேச, அதிகாரிகளுடன் பேச, வழக்குகளை விசாரிக்க, தமிழ் போதாதா?

"வெளிநாட்டுடன் வியாபாரம் செய்ய—விஞ்ஞான அறிவு பெற வேண்டுமானால், தமிழ் போதாது; ஆனால், இந்தியால் இது பூர்த்தியாகுமா? நம்மால் எது முடியாதோ, அது இந்தியாலும் முடியாது; இவ்வறிவுகளைப் பெற ஆங்கிலம் படிக்க வேண்டும்; வடநாட்டுக்காரர்களும் வெளிநாட்டு வியாபாரம்—விஞ்ஞானம் ஆகியவற்றை அறிவதற்கு ஆங்கிலம் கற்றாக வேண்டும்; நாமும், வடநாட்டுக்காரரும் பேசவோ, அந்நாடு செல்லவோ இருவருக்கும் பொதுவான ஆங்கிலத்தில் பேசிக்கொள்ளக்கூடாதா? மத்தியில் எந்தவித அவசியமும் இல்லாமல், என், இந்தியைப் படிக்க வேண்டும்?

"வடநாட்டுக்காரர்கள் ஆங்கிலம், இந்தி இரண்டு மொழி மட்டுமே படிக்கவேண்டும்; 100-க்கு 76 பேர் படிக்கத் தெரியாமல் இருக்கும் நாம், ஆங்கிலம், தமிழ் இந்தி ஆகிய மூன்று மொழிகளையும் படித்தாக வேண்டும்; தாய் மொழியையே படிக்காமல் 100க்கு 76 பேர் இருக்கும்போது, அவசியமில்லாத இந்தி எதற்கு? கார்டு—கவர்—மணியார்டர்பாரம்—கரன்சி நோட்டு இவைகளில் இந்தி எழுத்து மட்டும் இருக்கிறதே, ஏன்? இதுதான் ஜனநாயகமா? ஆங்கிலமும், இந்தியும் கலந்து அல்லவா இருக்கவேண்டும்? இவ்வளவு அவசரமாக—'கட்டாயம் இல்லை' என்று சொல்லிக்கொண்டே, காரியங்களில் கட்டாயப்படுத்துவது, மொழி ஆதிக்கத்தையும், அவர்களுடைய இந்தி வெறியையும்தானே காட்டுகிறது?"

கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவை

★

தாம்பரம் கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பாக 25-8-55 வியாழன் மாலை 4 மணிக்குக் 'குறள் விழா'ச் சிறப்புக்கூட்டம் நடைபெறும்.

அதுபோது தோழர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

சொற்பொழிவாற்றுவார்

கழகக் கூட்டம்

★

அம்மாப்பேட்டை

தலைவர்: பி. எம். கோபால்

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

ஈ. ஆர். கிருஷ்ணன்

சிற்றுளி சுப்பிரமணியம்

குறிப்பு:— தேதி குறிப்பிடப்படவில்லை.

தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

"தென்னாற்காடு மாவட்டத்தில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள், இத்திங்கள் 28, 29, 30, 31-ந் தேதிகளில் சுற்றுப் பயணம் செய்வார்கள்;

"மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களில் இன்னும் மாநில மாநாட்டிற்கான பங்குத் தொகையை அனுப்பாதிருப்பவை, உடனடியாக அனுப்பித் தர வேண்டுகிறேன்;

"அண்ணா அவர்களின் விரிவான சுற்றுப்பயணத் திட்டம் அடுத்து வெளியிடப்படும்."

ஃ ஃ ஃ

"28-8-55 ஞாயிறு பகல் 2 மணிக்கு, திருப்பாதிரிப்புலியூர், 'பாரீஸ் ஹால்' கட்டிடத்தில், அண்ணா அவர்கள் முன்னிலையில், மாவட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். பிரதிநிதிகள் யாவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன். பொருள்: மாநாட்டு நிதிக் கணக்கு; புதிய கழகங்களைப் பதிவு செய்தல்; பொதுக் குழு உறுப்பினர் ஒருவர் தேர்தல்,"

என்று தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

'தேசீயக் கொடியை அவமதிப்பது தேசத் துரோகச் செயலாகும்!'

பண்டித நேரு கருத்து

சிதாபூர், ஆக. 21—

"தேசீயக் கொடியை அவமதிப்பது நாட்டுக்கு இழைக்கும் துரோகமாகும்,"

என்று பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறாராம்.

பீகாரில் நடைபெற்ற சம்பவங்களைக் குறித்து, அங்கு மாணவர்கள் சிலர், தேசீயக் கொடிக்கு பங்கம் விளைவிக்க முயன்றிருக்கின்றனர்.

"இம்மாதிரி யாரேனும் வெளிநாட்டவர் நடந்துகொண்டிருந்தால் அல்லது, வெளிநாட்டில் எங்கேனும், கொடிக்கு அவமரியாதை ஏற்பட்டிருக்குமானால் அது ஒரு சர்வதேசக் கொந்தளிப்பை உண்டு பண்ணியிருக்கும்" என்று, பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

தேசீயக் கொடி உயர்த்தப்படுவதற்காக, தியாகிகள் பலரின் இரத்தம் சிந்தப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, தேசீயக் கொடியின் கௌரவத்தைக் காப்பதற்காக, போர்ச்சுக்கீசியரின் துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கிக்கொண்ட சுபத்ராபாய் சாகரைப் பற்றியும் நேரு குறிப்பிட்டாராம்.

மறைவு

★

"சுயமரியாதை இயக்கத்திலே நீண்ட நாட்களாக பற்றுகொண்டவரும், கோமளீசுவரன்பேட்டை வட்டத்தில் திராவிட கழகத் தலைவராக இருந்தவரும், வட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தவருமான தோழர் எம். எஸ். முகமது மோய்தீன் அவர்கள் 22-8-55 இரவு 1 மணி சுமாருக்கு இயற்கை எய்தியது குறித்து 31-வது வட்ட தி. மு. கழகம் தன் ஆழ்ந்த அனுதாபத்தை, அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது,"

என்று, செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை-ஆந்திரா எல்லை தகராறு

'பேச்சு வார்த்தைகளாலேயே முடிவு காண இயலும்'

மந்திரி சுப்பிரமணியம் மீண்டும் கூறுகிறார்

சென்னை, ஆக. 22—

சென்னை — ஆந்திர மாநிலங்களிடையேயுள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இரு மாநில மந்திரிகளும் மாநாடு ஒன்றில்கூடிப் பேச வேண்டுமென்று சென்னை சர்க்கார் யோசனை தெரிவித்திருப்பதாயும், அது குறித்து ஆந்திர சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாயும், மந்திரி சுப்ரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

"எல்லைக் குழு அமைக்கும் பிரச்சினை இரு மாநில சர்க்கார்களும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான முடிவு செய்ய முடியாமற்போனால்தான் எழும்பக்கூடியது; அதற்கிடையில், டில்லி சர்க்கார், இம்மாநிலங்களும் தேற்கொள்ளும் ஒரு முடிவை ஏற்றுக்கொள்ளுவது சாத்தியமானதே,"

என்றும், மந்திரி தெரிவித்திருக்கிறார்.

"வடக்கு எல்லைப் பிரச்சினை பற்றி சர்க்கார் முழு கவனத்துடன் இருக்கின்றனர்; 'எல்லைக்காக'—என்று கிளர்ச்சி துவங்கியிருப்பவர்கள், 'சர்க்காரின் பேரம் பேசும்' திறனில் நம்பிக்கை இல்லை என்பதினாலேயே கிளர்ச்சி துவங்குகின்றனர்," என்றும் அமைச்சர் கூறினார்.

"சித்தூரிலிருந்து கிளர்ச்சிக்காரர்கள் வந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதை ஒட்டி, சர்க்கார், மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டு, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடும் பொறுப்பை மத்திய சர்க்காரிடம் விட்டுவிடுமா?"—என்று கேட்கப்பட்டபோது, "சர்க்கார் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது," என்று கூறினார்.

அவர் மேலும், "பிரச்சினைக்கு, ஆந்திரா—சென்னை சர்க்கார்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் பரிகாரம் தேடமுடியுமா—என்று பார்க்கலாம்; முடிவு ஏற்படுவது இயலாதெனத் தெரிந்தால் பின்னர், வேறு வழிகள் பற்றி யோசிக்கலாம்; "துரிதமாகவே இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேட, சர்க்கார் முயற்சிக்கின்றனர்; ஆனால், கிளர்ச்சிக்காரர்கள், ஆர்ப்பாட்டம் நடத்துவதின் மூலம் அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள்," என்றும் கூறினார்.

★

ஆர்ப்பாட்டம்!

வரும் ஆக. 24-ந் தேதியன்று சட்டசபை முன், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள், எல்லைக் குழு அமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அறிவித்துள்ளார்.

★

போராட்டத்தை நிறுத்த நிபந்தனை விதிக்கிறார்!

குடந்தை, ஆக. 22—

ஆக. 23-ந் தேதிக்குள், சட்டசபைக் கட்டிடத்திற்கு முன் அமைதியாகக் கூடுவதைத் தடைசெய்து சர்க்கார் பிறப்பித்துள்ள 144-தடைஉத்தரவை திரும்பப் பெற்றுக் கொள்ளுவதானால், ஆக. 24-ந் தேதியன்று தான் துவங்கவிருக்கிற சித்தூர் தமிழர் உரிமைக்கான 'போராட்டத்தை' நிறுத்திவிடுவதாக தமிழரசுக் கழகத் தலைவர் தோழர் ம. பொ. சிவஞான கிராமணியார் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்திருக்கிறார்.

'அத்தகு ஒரு தடையுத்தரவு ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும்,' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், காந்திய இலட்சியத்தில் செல்லும் தமிழரசுக் கழகம் போன்ற இயக்கங்களுக்கல்ல, அந்தத் தடையுத்தரவு என்பதை, சர்க்கார் தெளிவாக்க வேண்டும் என்றும் கிராமணியார் கேட்டாராம்!

★

தெலுங்கர்களின் 'எதிர்ப் போராட்டம்'

திருத்தணி, ஆக 20—

'திருத்தணி வட்டத் தெலுங்கர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், தமிழர்களின் தவறான பிரச்சாரத்தை முறியடிக்கவும்'—என்று கூறி, ஆந்திர தெற்கு எல்லைக் குழுவின் சார்பில் திருத்தணி வட்ட தெலுங்கர்கள் மாநாடு ஒன்று, இங்கு நடைபெற்றது.

"சித்தூர் தகராறுக்கு இடமில்லாத தெலுங்குப் பகுதி என்று முடிவாகியிருந்த போதிலும், ஒரு எல்லைக் குழு இல்லாமலேயே சென்னை—ஆந்திர சர்க்கார்கள் எல்லைகளைத் திருத்தி அமைத்துக்கொள்ள, முடிவு செய்திருக்கின்றனர்; எனவே, இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, ஆக. 24ந் தேதி முதல் சென்னை சட்டசபை முன் சிலர் கிளர்ச்சி துவங்க முடிவெடுத்திருப்பது அநியாயமானதாகும்; எனவே, தெலுங்கர்கள் இப்போது விழித்துக்கொள்ள வேண்டும்; எதிர்ப் போராட்டம் நடத்த வேண்டும்," என்று, மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய பி. கோபாலரெட்டி என்ற எம்.எல் ஏ. பேசியிருக்கிறார்.

'நேர்மை வழி நின்று...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாங்கள்தான் என்பதை இந்த சபை நன்கு உணரும். குறிப்பாக எதிர்க் கட்சியிலிருக்கிற எங்களுக்கு, தாங்கள் எங்களைவிட்டுப் பிரிவது, பெரிய நஷ்டம் என்றே கருதுகிறேன்.

"ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள், தாங்கள் போனால், 'நமக்கு அந்தப் பதவி கிடைக்காதா?'—என்று நினைக்கலாம். எங்களுக்கு 'இத்தகைய தலைவரை இழக்கின்றோமே; வேறு தலைவர் இந்த இடத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா?'—என்ற கலக்கம் இருந்துதான் வருகிறது.

"வடநாட்டுக்காரர்கள் தமிழ்நாட்டவரை மதிப்பதில்லை; உத்தியோக விஷயங்களிலும் நியாயம் வழங்குவதில்லை; அத்தகைய வடநாட்டவருக்குத் தகுந்த புத்திமதி சொல்லி, தங்களுடைய சீரிய பண்புகளால் அவர்களை பரவசப்படுத்தி, தமிழ்நாட்டைப்பொறுத்த வரையிலும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும், தாழ்ந்த சமூக மக்களுக்கும் தகுந்த நியாயம் கிடைக்கும்படி வாதாடுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது."

சொற் பயிற்சிக் கூட்டம்

24-8-55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லில், தோழர் கு. ம. துரை தலைமையில், 'கோவா போராட்டம்' என்னும் பொருள் குறித்து சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.